TAMILTH ALL 1 TNadu_01 S.VENKATACHALAM Time

பொன்மொழி

ஆசைகளுக்கு சமமான நெருப்பு வேறொன்றும் இல்லை. அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறெதுவும் இல்லை.

- புத்தர்

இணையம்: சாக் இன்.:போடெக் நிறுவனம் பட்டய கணக்காளர், நிறுவனச் செயலர், மனித ஆற்றல் மேலாளர்களின் தேவைக்கேற்ற மென்பொருட்களை தயாரிக்கிறது. எதிர்காலத்துக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் வசதி, தொழில்நுட்ப ஒத்துழைப்பும் வழங்கப்படுகிறது. https://saginfotech.com/ இணையதளத்தில் இதுகுறித்து முழுமையாக அறியலாம்.

பொதுஅறிவு: ராஜஸ்தானின் பழைய பெயர் 'குஜராட்டிரா'. குஜ்ஜர்களால் பாதுகாக்கப்பட்ட பகுதி என்று பொருள். இங்கு கி.பி. 700–க்கு முன் மௌரியர்கள், மாலவாக்கள், அர்ஜுனயர்கள், குஷாணர்கள், குப்தர்கள், ஹூணர்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்

வேட்புமனுக்களை திரும்ப பெறும் அவகாசம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது

■ சென்னை

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட 74,000-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுக்களை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் இன்று (பிப். 7) மாலை 3 மணியுடன் நிறைவடைகிறது.

தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சிகள் உள்ளன. இவற்றில் உள்ள 12,838 வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை மாநில தேர்தல் ஆணையம் கடந்த மாதம் 26-ம் தேதி அறிவித்திருந்தது.

கடந்த ஜன. 28-ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. பிப். 4-ம் தேதியுடன் மனு தாக்கல் நிறைவடைந்தது. இதில், மாநகராட்சிகளில் போட்டியிட 14,701 வேட்புமனுக்கள், நகராட்சிகளில் 23,354 வேட்புமனுக்கள், பேரூராட்சிகளில் போட்டியிட 36,361 வேட்புமனுக்கள் என மொத்தம் 74,416 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 699 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முறையாக பூர்த்தி செய்யாதவை, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காதவை, வைப்புத்தொகை செலுத்தாதவை போன்ற காரணங்களால் பல வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் இன்று மாலை 3 மணியுடன் நிறைவடைகிறது. இன்று மாலையே வேட்பாளர் இறுதிப் பட்டியல்கள் வெளியிடப்பட உள்ளன. தொடர்ந்து, சுயேச்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள் ஒதுக்கப்பட உள்ளன.

மாவட்ட அளவில் தேர்தல் பணிகளைக் கண்காணிக்க 40 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வட்டார அளவில் தேர்தல் பணிகளைக் கண்காணித்து, மாவட்டப் பார்வையாளர்களுக்கு தெரிவிக்க ஏதுவாக 697 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பார்வையாளர்களின் தொடர்பு எண்கள் மாநில தேர்தல் ஆணையத்தின் https://tnsec.tn.nic.in/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 4 நாட்களுக்கு வறண்ட வானிலை

■ சென்னை

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வரும் 7, 8, 9, 10 ஆகிய 4 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும். சென்னையில் அடுத்த 48 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.

பிப். 6-ம் தேதி (நேற்று) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் குறிப்பிடும்படியாக எங்கும் மழை பதிவாகவில்லை. மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதுமில்லை. இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இணையவழி தேர்வில் பங்கேற்கும் மாணவர்கள் விடைத்தாளை

தேர்வெழுதிய தினமே பதிவேற்ற வேண்டும்

● தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் உத்தரவு

■ சென்னை

கரோனா பெருந்தொற்று சூழல் காரணமாக தமிழக அரசின் அறிவுறுத்தலின்பேரில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் செமஸ்டர் தேர்வுகளை இணையவழியில் நடத்த உள்ளது. இளங்கலை, முதுகலை படிப்புகளுக்கான செமஸ்டர் தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

இந்நிலையில், இணையவழி தேர்வு வழிகாட்டு நெறிமுறைகளை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு) எம்.மணிவண்ணன் வெளியிட்டுள்ளார். அதன்படி, கரோனா பரவல் சூழலை கருத்தில்கொண்டு மாணவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் இருந்தே தேர்வை எழுதலாம். தேர்வு நுழைவுச்சீட்டுக்குப் பதில் இணையவழியில் அவர்களின் சேர்க்கை எண்ணை பயன்படுத்தி தேர்வில் கலந்துகொள்ளலாம்.

தேர்வுக்கான வினாத்தாளை தேர்வு நாள் அன்று காலை 9 மணி அளவிலும் பிற்பகல் 1 மணி அளவில் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். காலை தேர்வை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையும் பிற்பகல் தேர்வை 2 மணி முதல் மாலை 5 மணி வரையும் எழுதலாம்.

விடைத்தாள் முகப்பு பக்கம் இணையதளத்தில் உள்ளது. மாணவர்கள் அதை பதிவிறக்கம் செய்து ஒவ்வொரு பாடத்துக்கும் தனித் தனியாக நிரப்பி அதை விடைத்தாளுடன் இணைக்க வேண்டும். தேர்வு எழுதிய அன்றேய தினமே விடைத்தாளை பல்கலைக்கழக தேர்வு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். விடைத்தாள்களை அனைத்து தேர்வுகளும் முடிந்த கடைசி நாளன்று பல்கலைக்கழகத்துக்கு தபால் அல்லது கூரியர் மூலமாக அனுப்ப வேண்டும். இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட விடைத்தாள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட விடைத்தாள் இரண்டும் ஒப்பிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். விடைத்தாள்களில் மாற்றம் இருந்தால் அவை மதிப்பீடு செய்யப்படாது.

பார்வைக்குறைபாடு உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் முன்அனுமதி பெற்று தேர்வு எழுத உதவியாளர்களை ஏற்பாடு செய்துகொள்ளலாம். விடைத்தாள் முறைகேட்டில் ஈடுபடும் மாணவர்கள் தேர்வெழுத தடை செய்யப்படுவர். மாணவர்கள் தேர்வுகள் தொடர்பான விவரங்களை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் அவ்வப்போது பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அதிமுக முன்னாள் அமைச்சர்களுக்கு

பாஜகவுக்கு ஆதரவாக இருப்பதே தலையாய பணி

● அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு

■ சென்னை

ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட முன்னாள் அதிமுக அமைச்சர்களுக்கு, சமூகநீதிக்கு எதிரான பாஜகவுக்கு ஆதரவாக இருப்பதே தலையாய பணி என்று தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலின் தொடங்க இருக்கும் அனைத்திந்திய சமூகநீதிக் கூட்டமைப்பில் சேருவதற்கு விடுத்த அழைப்பை ஏற்க மறுத்து, 'அதிமுகவுக்கும், சமூகநீதிக்கும் என்ன தொடர்பு ? எங்களை ஏன் அழைக்கிறீர்கள்?' என்று கூறும்வகையில், அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் 7 பக்க அறிக்கை அளித்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

அரசியல் நாகரீகம் கருதியும், சமூகநீதியில் அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவே, அதிமுகவையும் முதல்வர் ஸ்டாலின் அழைத்தார்

ஊருக்கு உபதேசம்

அனைத்திந்திய சமூகநீதிக் கூட்டமைப்பில் இணையாமல் இருப்பது அதிமுகவின் விருப்பம். ஆனால் நீட் தேர்வு ரத்து போன்ற மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஸ்டாலினை பார்த்துச் சொல்லும் ஓ.பன்னீர்செல்வம், மிக முக்கியமான நீட் கூட்டத்துக்குகூட வராமல்போனது 'ஊருக்கு உபதேசம்' என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது.

பாஜக தயவைப் பெற...

பாஜகவின் தயவைப் பெறுவதற்காக, ஸ்டாலினை விமர்சிக்கும் கட்டாயம் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஏற்பட்டுள்ளது. ஸ்டாலினை விமர்சித்தால் மட்டுமே தங்களுக்குப் பிழைப்பு என்று இருப்பவர்கள், சமூகநீதிக் கூட்டமைப்பில் இணைய மாட்டோம் என்று கூறுவதில் வியப்பு ஏதுமில்லை.

ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட முன்னாள் அதிமுக அமைச்சர்களுக்கு, சமூகநீதி, சமத்துவ விரோத பாஜகவுக்கு ஆதரவாக இருப்பதே தலையாய பணியாக இருப்பதைத்தான் அவரது அறிக்கை உணர்த்துகிறது.

இவ்வாறு அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

▲ நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலையொட்டி, சென்னை மாநகராட்சி வார்டுகளில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் தலைவர் கமல்ஹாசனை சந்தித்து, தேர்தலை நேர்மையாக எதிர்கொள்வதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். படம்: க.ஸ்ரீபரத்

கல்லூரிகளில் தாய்மொழி தினம் கொண்டாட வேண்டும்

● பல்கலை. மானியக் குழு அறிவுறுத்தல்

■ சென்னை

பல்கலைக்கழக மானியக் குழு செயலர் ரஜினிஷ் ஜெயின், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) முன்மொழிந்தபடி, ஆண்டுதோறும் பிப்ரவரி 21-ம் தேதி தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த நாளில் உலகம் முழுவதும், அந்தந்த மொழிசார்ந்த கலாச்சார நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும். அதன்படி, நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் வரும் பிப். 21-ம் தேதி தாய்மொழி தினத்தை விமரிசையாக கொண்டாட வேண்டும். இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசப்படும் சிறப்பை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மொழி சார்ந்த கலை நிகழ்ச்சிகள், குழு விவாதங்கள், பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகள் மற்றும் கண்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

இவ்வாறு சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கமல்ஹாசன் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பு

■ சென்னை

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் சென்னையில் நேற்று வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குபதிவு வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. இதில், சென்னை மாநகராட்சியில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் மாலாவை ஆதரித்து, மந்தைவெளியில் உள்ள விசாலாட்சித் தோட்டத்தில் நேற்று காலை மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வாக்கு சேகரித்தார்.

அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஆரத்தி எடுத்து கமல்ஹாசனை வரவேற்றனர். அங்கு வீடு வீடாகச் சென்று, துண்டுப் பிரசுரங்களை வழங்கி கமல்ஹாசன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மக்கள் நலனில் ஆர்வம் கொண்ட, நேர்மையானவர்களான மக்கள் நீதி மய்யம் வேட்பாளர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று கமல்ஹாசன் கேட்டுக் கொண்டார்.

பின்னர், ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள மக்கள்நீதிமய்யம் தலைமை அலுவலகத்தில், சென்னை மாநகராட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில், 182 வேட்பாளர்களை கமல்ஹாசன் அறிமுகம் செய்துவைத்தார்.

உறுதிமொழி ஏற்பு

தொடர்ந்து, 'நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நேர்மையாக எதிர்கொள்வேன், மருத்துவமனை தரத்தை உயர்த்துவேன்' உள்ளிட்ட உறுதி மொழிகள் அடங்கிய சத்தியப் பிரமாணத்தை வேட்பாளர்கள் எடுத்துக் கொண்டனர்.

அப்போது, கட்சி நிர்வாகி ஒருவர் ரூ.1 லட்சமும், கொளத்தூரைச் சேர்ந்த எட்வின் என்ற 6 வயது சிறுவன், உண்டியலில் சேர்த்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயையும் கமல்ஹாசனிடம் நன்கொடையாக அளித்தனர்.

பின்னர், கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "எங்களது பிரச்சாரம், மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்புடையதாக இருக்கும். செய்யக் கூடிய விஷயங்கள் அனைத்தையும் செய்து காட்டும் வாய்ப்பாக இந்த தேர்தலைப் பார்க்கிறேன். நீட் விவகாரத்தில் மத்திய அரசு சொல்வதைத்தான் ஆளுநர் செய்கிறார்" என்றார்.

தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வராது என்று ராகுல் காந்தியின் கூறியது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு "தமிழகத்தை ஒரு போதும் பாசிசம் ஆளக்கூடாது என்பதுதான் எனது கருத்து" என்று கமல்ஹாசன் கூறினார்.

நீட் தேர்வுக்கு அதிமுக காரணம் என்று கூறுவதா?

● அமைச்சர் துரைமுருகனுக்கு ஓபிஎஸ் கண்டனம்

■ சென்னை

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்ட அறிக்கை:

நீட் தேர்வு தொடர்பாக அதிமுக மீதும், என் மீதும் அமைச்சர் துரைமுருகன் குற்றம்சாட்டி அறிக்கை வெளியிட்டுள்ளார். மத்திய காங்கிரஸ் ஆட்சியில் திமுக அங்கம் வகித்தபோது, இந்திய மருத்துவக் குழுவால் இளநிலை மருத்துவப் படிப்புக்கான ஒழுங்கு நெறிமுறை 2010 டிசம்பர் 27-ம் தேதி வகுக்கப்பட்டு, அரசிதழில் அதே மாதம் 27-ம் தேதி வெளியிடப்பட்டது.

அதாவது, 2010-ம் ஆண்டே மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. அப்போதுமத்தியசுகாதாரம்மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சராக இருந்தவர், திமுகவைச் சேர்ந்த எஸ்.காந்திசெல்வன். அடுத்த 5 மாதங்களில் திமுக ஆட்சியை இழந்து விட்டதால், அப்போது நீட் தேர்வு அமல்படுத்தப்படவில்லை.

எனவே, கருணாநிதி முதல்வராக இருந்தபோது நீட் தடுத்து நிறுத்தப்பட்டதாக துரைமுருகன் கூறுவது உண்மையல்ல.

பின்னர், நீட் தேர்வு மூலம்தான் மருத்துவ சேர்க்கை நடைபெற வேண்டும் என்று அனைத்து மாநில சுகாதாரச் செயலர்களுக்கும் எம்சிஐ அறிவுறுத்தியது. இதை அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட பல மாநில முதல்வர்கள் எதிர்த்தனர்.

இதையடுத்து, மத்திய அரசு நீட் தேர்வைத் தள்ளிவைத்தது. 2013-ல் நீட் தேர்வு அறிவிப்பு வெளியானபோது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதனால், நீட் அறிவிப்புக்கான 2 அறிக்கையையும் ரத்து செய்யப்பட்டது. இதில் திமுகவின் பங்கு இல்லை.

நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் அதிமுகவின் நிலைப்பாடு. திமுகவின் தவறால் ஏற்பட்ட காயத்துக்கு மருந்து கொடுத்து குணப்படுத்த, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள்இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

நீட் தேர்வு ரத்துக்கு அதிமுக தொடர்ந்து குரல் கொடுக்கும். ஏற்கெனவே செய்த தவறை ஒப்புக் கொண்டு பரிகாரம் செய்யத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளாமல், அதிமுகவைக் குறை கூறுவது கண்டனத்துக்குரியது.

மின்வாரியத்தில் இழப்பு அதிகரிக்க ஊழல், நிர்வாக குறைபாடே காரணம்

● பாமக நிறுவனர் ராமதாஸ் குற்றச்சாட்டு

■ சென்னை

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இழப்பு கடந்த ஆண்டில் ரூ.17,000 கோடியை தாண்டிவிட்டதாக கணக்கு தணிக்கையில் தெரியவந்துள்ளது. வரலாறு காணாத இந்த இழப்பு தமிழ்நாடு மின்வாரியத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

மின்வாரியத்தின் இழப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதற்கு காரணம், அங்கு நிலவும் ஊழல்களும், நிர்வாகக் குறைபாடுகளும்தான்.

எந்த ஆட்சியாக இருந்தாலும் அதிகாரத்தில் இருக்கும் சிலர் லாபம் பார்ப்பதற்காகவே அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்படுகிறது. அத்துடன் மின்வாரியத்தில் நிலவும் நிர்வாக சீர்கேடுகளும் இழப்பை அதிகரிக்கின்றன. அவை சரிசெய்யப்பட வேண்டும். மின்வாரியத்தின் இழப்பை போக்கி, லாபத்தில் இயங்குவது உறுதி செய்யப்படாவிட்டால், பெரும் பாதிப்பு ஏற்படும்.

எனவே, மின் கட்டணத்தை உயர்த்துவது போன்ற மக்களை பாதிக்கும் நடவடிக்கைகளை எடுக்காமல், மின் உற்பத்தியை அதிகரிப்பது, நிர்வாக சீர்கேடுகளை போக்குவது போன்றவை மூலம் மின்வாரியத்தை லாபத்தில் இயக்குவதற்கான துணிச்சலான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

சூழலை பாதுகாக்க சாயம் தோய்க்காத துணிப் பை பயன்பாட்டை ஊக்குவிக்க திட்டம்

● தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தகவல்

ச.கார்த்திகேயன்

■ சென்னை

பாரம்பரிய அடையாளத்தை மக்களுக்கு நினைவூட்டவே 'மீண்டும் மஞ்சப்பை' திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக சாயம் தோய்க்காத பைகள் பயன்பாட்டை மட்டுமே ஊக்குவிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 2019 ஜனவரி 1-ம் தேதி முதல், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு அரசு தடை விதித்துள்ளது. மேலும், அதற்கு மாற்றுப் பொருட்களையும் அரசு வெளியிட்டது. எனினும், மாற்றுப் பொருட்களின் விலை கூடுதாக இருப்பதாலும், போதுமான மக்கள் ஒத்துழைப்பு இல்லாததாலும் பிளாஸ்டிக் தடை வெற்றி பெறவில்லை. இந்நிலையில், பிளாஸ்டிக் தடையை மக்கள் இயக்கமாக கொண்டுசென்று, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று தமிழ அரசு அறிவித்தது.

மேலும், பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக 'மீண்டும் மஞ்சப்பை' என்ற திட்டத்தை கடந்த டிச. 23-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார். "மஞ்சப்பை என்பதை யாரும் அவமானமாகக் கருத வேண்டாம். சுற்றுச்சூழலைக் காப்பவரின் அடையாளம்தான் மஞ்சள் பை என்றும் முதல்வர் தெரிவித்தார்.

இந்த திட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில், தொண்டு நிறுவனங்களும், பெருநிறுவனங்கள் தங்கள் சமூகப் பொறுப்பு நிதியிலும் மஞ்சள் நிற துணிப் பைகளை வழங்கி, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளன.

மாசடைந்த நீர்நிலைகள்

இதற்கிடையே, "சாயப்பட்டறை கழிவுகளால் திருப்பூர், கரூர் பகுதிகளில் நொய்யல் ஆறு கடுமையாக மாசடைந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சாயக் கழிவுகளால் நீர்நிலைகள் மாசடைந்துள்ளன.

பல நேரங்களில் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டு இருப்பதாலும், சில அதிகாரிகளின் பணத்தாசை காரணமாகவும், அரசியல் அழுத்தம் காரணமாகவும் சாயக்கழிவுகளால் நீர்நிலை மாசுபடுவதை தவிர்க்க முடியவில்லை.

மஞ்சள் கிழங்கு சாயம்

உண்மையிலேயே சுற்றுச்சூழலை பாதிக்கக்கூடாது என்றால் மஞ்சள் சாயம் தோய்த்த பைகளுக்கு பதிலாக, மஞ்சள் கிழங்கிலிருந்து கிடைக்கும் சாயத்தில் தோய்த்த பைகளை மட்டுமே பிரபலப்படுத்த வேண்டும் ரசாயன சாயம் தோய்த்த பைகளை அரசு பிரபலப்படுத்தினால், அதன் மூலமும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும்" என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து மாசுக்கட்டுபாட்டு வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது, "பாரம்பரிய அடையாளத்தை மக்களுக்கு நினைவூட்டவே 'மீண்டும் மஞ்சப்பை' என்ற கருப்பொருள் கையாளப்பட்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சாயம் தோய்க்காத துணிப் பைகள் பயன்பாட்டை மட்டுமே ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்றனர்.

படிவம் B

பொது அறிவிப்பு

(திவாலா நிலை மற்றும் திவால்நிலை ஒழுங்குமுறை 6 (பெருநிறுவனதாரர்களின் திவால் தீர்வு செயல்முறைகள்) ஒழுங்குமுறைகள், 2016-ன்கீழ்)

கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-ன் பங்குதாரர்களின் கவனத்திற்கு

விபரங்கள்

1.	பெருநிறுவன கடன்தாரர் பெயர்	கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்
2.	கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	29.05.2006
3.	பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைத்தது/பதிவு செய்தது	கம்பெனிகள் சட்டம், 1956
4.	பெருநிறுவன அடையாள எண்./ பெருநிறுவன கடன்தாரரின் குறுகிய பொறுப்பு அடையாள எண்.	U40102TN2006PTC060009
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருந்தால்)	**கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்** 7வது தளம், புஹாரி டவர்ஸ், 4, மூர்ஸ் சாலை, சென்னை - 600006.
6.	பெறுநிறுவன கடன்தாரரின் திவால் ஆரம்ப தேதி	04.02.2022
7.	திவால் தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி	திவால் தீர்மான நடவடிக்கை நாளிலிருந்து 180 நாட்கள், ஆகஸ்ட் 3, 2022
8.	கலைப்பாளராக செயல்படும் இடைக்கால திவால் வல்லுநரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**பெயர்: திரு.ராதாகிருஷ்ணன் தர்மராஜன் பதிவு எண்.** IBBI/IPA-001/IP-P00508/2017-2018/10909
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கலைப்பாளரின் முகவரி	**முகவரி:** D3 பிளாக் 1, திரிம்பா அப்பார்ட்-மெண்டஸ், 114, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை, தமிழ்நாடு-600106. **மின்னஞ்சல்:** dharma67@gmail.com
10.	கலைப்பாளரின் தொடர்புக்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	**முகவரி:** D3 பிளாக் 1, திரிம்பா அப்பார்ட்-மெண்டஸ், 114, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை, தமிழ்நாடு-600106. **மின்னஞ்சல்:** cirp.coastal@gmail.com
11.	உரிமைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	21.02.2022
12.	இடைக்கால திவால் வல்லுநரால், கடன் வழங்குநர்களின் வகுப்பு, பிரிவு 21-ன் துணை-பிரிவு (6A)-ன் உட்பிரிவு (6)-ன்கீழ், ஏதேனும் இருப்பின்	பொருந்தாது
13.	வகுப்பின் கடன் வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்டபிரதிநியாக செயல்பட அடையாளம் காணப்பட்ட திவால் வல்லுநர்களின் பெயர்கள் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவம் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிகளின் விபங்கள் :	இணைய தொடர்பு: https://www.ibbi.gov.in/home/downloads பொருந்தாது

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், உத்தரவின்படி **கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-ன்** கலைப்பிற்கான செயல்முறைகள் **04.02.2022** அன்று ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு அளிக்கப்படுகிறது.

கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-ன் பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரல்களுக்கான ஆதாரங்களை **21.02.2022** அன்று அல்லது அதற்கு முன்பாக வ.எண்.10-ல் குறிப்பிட்டுள்ள கலைப்பாளரின் முகவரியில் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னணு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

போலியான அல்லது தவறான ஆதாரங்களை உரிமைகோரலுக்காக சமர்ப்பிப்பது தண்டனைக்கு வழிவகுக்கும்.

Sd/-
திரு. R தர்மராஜன்

நாள் : 07.02.2022 கோஸ்டல் எனர்ஜென் லிமிடெட்-க்கான இடைக்கால திவால் வல்லுநர்
இடம் : சென்னை **பதிவு எண்.**IBBI/IPA-001/IP-P00508/2017-2018/10909